செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1122 — 1970 ஆகஸ்ட் 30 ஞாயிற்றுக்கிழமை — விலை சதம் 5

of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division

## வெளிநாடுகளில் கடமையாற்றவுள்ள நமது-

# தூதுவரின் மனைவியரை பிரதமர் சந்திப்பார்

**வெளிநாடுகளுக்கு ராஜதந்திர தூதுவர்களாகச் செல்லவிருக்கும் பிரமுகர்களின் மனைவியரை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சந்திக்க இருக்கிறார்.**


"உங்கள் கணவர்கள் தூதுவர்களாகக் கடமையாற்றவுள்ள நாடுகளில் நீங்கள் எமது நாட்டின் கலாசார தூதுவர்களாக நடந்து கொள்ள வேண்டும். ஈழத்துப் பெண்களைப் பற்றி வெளி நாட்டவர்கள் நல்ல மதிப்புக் கொள்ளும் விதத்தில் நீங்கள் கருமமாற்ற வேண்டும்" என அவர்களுக்கு பிரதமர் வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

இலங்கையில் அரசாங்கம் மாறியதை அடுத்து வெளிநாடுகளில் கடமையாற்றிய பல தூதுவர்கள் திருப்பி அழைக்கப்பட்டது தெரிந்ததே.

அந்த நாடுகளுக்கு எல்லாம் புதிதாக தூதுவர்களை இன்றைய அரசாங்கம் நியமித்துள்ளது. இந்தத் தூதுவர்கள் வெளிநாடுகளில் எவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்று ஏற்கனவே அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அவ்விதமே அந்தத் தூதுவர்களின் மனைவியரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென பிரதமர் அவர்களுக்குத் தெரியப் படுத்தவுள்ளார்.

இலங்கையின் பிரதமர் ஒரு பெண்மணியாக உள்ளதால் வெளிநாடுகளில் ஈழத்துப் பெண்கள் பற்றி உயர்ந்த கருத்து நிலவ வேண்டும் என ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். (ம)



கன்னி இவள் பார்க்கும் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் தெரியவில்லையா?, அவள் உள்ளத்தில் ஏதோ கவலை. அதைப் போக்குவார் இல்லையா? (ம)

### மீனாட்சி



'என்னுங்க, பொதுவாகத் தொழிற் சங்கத் தலைவர்கள் என்பவர்கள் மற்றவர்கள் மீது சற்றே வசை புராணங்கள் பாடி வருகின்றவர்கள் தானே!'

'அது என்னவோ உண்மைதானுங்க, ஆனால் அவர்கள் பதவிக்கு வந்தால் அவர்களை எவரும், எதுவும் சொல்லக் கூடாதாம்!'

## கிளிநொச்சி ப. ச. தமிழரசார் வசம்

சாவகச்சேரி, ஆக. 29

கிளிநொச்சி பட்டின சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 7 வட்டாரங்களில் 5 வட்டாரங்கள் தமிழரசார் வசமாயின. 2 வட்டாரங்களில் சுயேச்சைகள் வெற்றிபெற்றுள்ளனர்.

வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:- 1-ம் வட்டாரம் சு. முருகேசு (த- அ- க.), 2-ம் வட்டாரம் சு. பொன்னம்பலம் (சு), 3-ம் வட்டாரம் க. கிருஷ்ணராஜா (சு), 4-ம் வட்டாரம் இ. நடராஜா (த- அ- க-), 5-ம் வட்டாரம் நா- பசுபதி (த. அ. க.)6-ம் வட்டாரம் க. க. கந்தையா (த. அ. க.), 7-ம் வட்டாரம் நடேசலிங்கம் (த. அ. க). (ம-51),

## பிரதமர் வாழ்த்து

நாளை, 31-ந் திகதி நடைபெற இருக்கும் மலேசிய தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கைப் பிரதமர் திருமதி "ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மலேசியப் பிரதமருக்கு நல்வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

## புனரமைப்பு

நீர்ப்பாசன, மின்சார, பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் உள்ள பொறியியல் சேவைகள் யாவும் புனரமைப்புச் செய்யப்படும்,

## லண்டன் செல்வார்

இலங்கைக் கடற்படைத் தளபதி டி. வி. ஹண்டர் தமது மகளின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள லண்டன் செல்லவிருக்கிறார்.

# மாளிகாகந்தையில் தீவிர கைக்குண்டு வேட்டை!

கொழும்பு மாளிகாகந்தையில் கைக்குண்டு வேட்டையில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்று ஒரு கைக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் இரு குழந்தைகள் பலத்த காயம் அடைந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாளிகாகந்தையில் உள்ள தோட்டமொன்றில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தபோது அங்கே சில தகரப் பூட்டிகளைக் கண்டன. ஒரு புட்டியைக் குழந்தை ஒன்று கையில் எடுத்து சுவரில் மோதி எறிந்தபோது அதுவெடித்ததால் இரு குழந்தைகள் காயமடைந்தன.

ஒன்பது வயதுள்ள ஷாப்தீன் என்னும் குழந்தையும் ஏழு வயதுள்ள ஸவைப்தீன் என்னும் குழந்தையும் தற்போது கொழும்பு லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மாளிகாகந்தைப் பகுதியில் கைக் குண்டு தயாரிப்பவர்கள் மறைத்து வைத்திருந்த கைக்குண்டுகளில் இவை ஒரு பகுதியாக இருக்கலாம் எனப் பொலீஸார் நம்புகின்றனர்.

குறிப்பிட்ட தோட்டத்தில் இரு பிரிவினர் மத்தியில் கடந்த சில காலமாக கைகலப்பு ஏற்பட்டு உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதை அடுத்து மாளிகாகந்தைப் பகுதியில் பொலீஸார் தீவிர கைக்குண்டு வேட்டை நடத்தி வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுக்கன்றைத் திருடி இறைச்சிக்காக கொன்றனர்

# தந்தை, மகன், மருமகன் மூவருக்கு சிறைவாசம்

### கையும் மெய்யுமாக பிடிபட்டு குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்

மன்னார், ஆக. 29

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் மன்னார் நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை பெற்றனர்.

தலைமன்னார் வாசிகளான தந்தை, மகன், மருமகன் ஆகிய மூன்று பேரும் இன்னொருவருக்குச் சொந்தமான பசுக் கன்று ஒன்றைத் திருடி இறைச்சிக்காக அதைக் கொன்ற குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்.

மன்னார் நீதவான், அம்மூவருக்கும் தலா இரண்டு வாரக் கடூழிய சிறைத் தண்டனை விதித்தார். தலைமன்னார் பொலீஸாரால் எதிரிகள் ஆஜர் செய்யப் பட்டனர்.

இம்மூன்று எதிரிகளும் அதே கிராமத்தைச் சேர்ந்த ஜோசப் தற்குரூஸ் என்பவருக்குச் சொந்தமான ஐம்பது ரூபா பெறுமதியான பசுக் கன்றைக் களவாகப் பிடித்து உப்புத்தரவை என்ற காட்டுக்குள் வைத்து இறைச்சிக்காக வெட்டினராம். தலைமன்னார் பொலீஸ் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஜி. டபிள்யூ. பீட்டருக்கு உடன் இது பற்றித் தெரிவிக்கப்பட்டது. விரைந்து சென்ற பொலீஸ் கோஷ்டி மூன்று எதிரிகளையும் வெட்டிய பசுக் கன்றை உரித்துக் கொண்டிருந்த போது கையுமாகப் பிடித்ததாம்.

இதைத் தொடர்ந்து மூன்று எதிரிகளும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது, குற்றச் சாட்டை ஏற்றுக் கொண்டனர். நீதவான் அவர்களுக்கு இரு வாரக் கடூழியச் சிறைதண்டனை விதித்தார். (ல-185)

தந்தி
சிறு விளம்பரங்கள்

### வேலை தேவை

ரெடிமேட் ஷேர்ட், பொடி தைப்பதில் 10 வருட அனுபவமுள்ள ஒரு நடுத்தர வயதுடைய முஸ்லிம் பெண்ணுக்கு வேலை தேவை. விபரங்களுடன் எழுதவும். T. M. 70252 மே/பா. தந்தி த. பெ. 1257, கொழும்பு.

### விற்பனை பெருக விளம்பரம் செய்க

## "நீதியும் நியாயமும்"

முஸ்லிம் கலீபாக்களும், மாமன்னர்களும், தலைவர்களும் நீதியையும் நியாயத்தையும் பேணிப் போற்றி வந்திருக்கின்றனர். அவர்களுள் சிலரது வாழ்க்கையில் நீதியும் நியாயமும் பின்னிப் பிணைந்திருந்த முறைமையை விளக்கும் உண்மைச் சம்பவங்களைத் தேடித் தொகுத்து, நூலாக வெளியிட்டிருக்கிறார் வித்தியோதயப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அல்ஹாஜ் ம. மு. உவைஸ் ...

"நீதியும் நியாயமும்" என்ற தலைப்பைக் கொண்டுள்ள இந்நூலை, சென்னை ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அன் ஸன்ஸ் நிறுவனத்தார் அச்சுவாகனம் ஏற்றியிருக்கிறார்கள்.

முஸ்லிம் பெரியார்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த முப்பத்தெட்டுச் சம்பவங்களைச் சுவையான முறையில், எளிய நடையில், தமக்கே உரித்தான தமிழ்ல் எழுதியிருக்கிறார் அல்ஹாஜ் உவைஸ்.

இந் நூலின் விலை ரூபா 2-08; கொழும்பு புறக்கோட்டை, கெய்ஸர் வீதி, 194-ம் இலக்கத்தில் உள்ள ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அன் ஸன்ஸ் நிறுவனத்தில் இந் நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

— தாஸ்.

## ஸ்பானிய மொழியில் மாலுமி சாட்சியம்

திருகோணமலை, ஆக. 29

திருகோணமலை நீதிமன்றத்தில் ஸ்பானிய மொழியில் அந்நாட்டு மாலுமி ஒருவர் சாட்சியம் அளித்தார்.

திருமலையில் தங்கியுள்ள நியூஹித் என்ற ஸ்பெயின் கப்பலைச் சேர்ந்த மாலுமியான டி. அலொங்ஸ் என்பவரின் "சீக்கோ" கைக்கடிகாரத்தை வழிப்பறி செய்ததாக இரண்டு இலங்கையர் மீது தொடரப்பட்ட வழக்கு இன்று திருமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா முன் விசாரணைக்கு வந்தது.

அப்பொழுது முறைப்பாட்டுக்காரரான டி. அலோங்ஸ் ஸ்பானிய மொழியில் சாட்சியமளித்தார்.

அவரது சாட்சியம் ஸ்பெயின் கப்பல் தலைவரான திரு. டி. பி. ஜோன்ஸ் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

அலொங்ஸ் தனது சாட்சியத்தில், "சம்பவ தினம் நான் துறைமுக இறங்கு துறையில் நிற்கையில் முதலாம் எதிரி நான் அணிந்து இருந்த சீக்கோ கைக்கடிகாரத்தைப் பறித்து அழுத்து எடுத்துக் கொண்டு ஓடினார்" என்றார்.

கான்ஸ்டபிள் அப்பையா சாட்சியமளிக்கையில், தகவல் கிடைத்து விஸ்ஓ இறங்கு துறைக்குச் சென்றபொழுது இரண்டு எதிரிகளையும் கண்டேன். என்னைக் கண்டதும் முதலாவது எதிரி தனது கையிலிருந்த பொருள் ஒன்றை இரண்டாவது எதிரியின் சட்டைப் பையில் போட்டுவிட்டு ஓட்டம் பிடிக்க முயற்சித்தார். நான் அவரைக் கைது செய்ததுடன் இரண்டாவது எதிரியிடமிருந்து சீக்கோ கைக்கடிகாரத்தையும் கைப்பற்றினேன் என்றார்.

ஸ்பெயின் நாட்டுக் கப்பல் செப்டம்பர் 7-ல் திருமலையில் இருந்து புறப்பட இருப்பதாக நீதவானுக்குத் தெரிவிக்கப்பட்டது.

நீதவான் மேல் விசாரணையை செப்டம்பர் 1-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

சப் இன்ஸ்பெக்டர் கோமஸ் வழக்கை நடத்தினார். வழக்கறிஞர் திரு. சம்பந்தர் எதிரிகள் சார்பில் ஆஜரானார். (ல-287)

## மரியாவத்தையில் இரவில் கொள்ளை

நாவலப்பிட்டி, ஆக. 29

மரியாவத்தை பயங்கரப் பிரதேசமாக மாறிவருகிறது. இரவில் இப் பாதையில் செல்பவர்களை கொள்ளையடிக்கும் கும்பல் ஒன்று நடமாடிவருகிறது.

தனித்து வரும் வியாபார வேன்களும் தடுத்து நிறுத்தப்பட்டு அதிலுள்ள பொருட்கள் பணம் முதலியன கொள்ளை அடிக்கப்படுகின்றனவாம். (ல-215)

## வேலை நிறுத்தம்

நாவலப்பிட்டி, ஆக. 29

புரட்டாசி தோட்ட உத்தியோகஸ்தர் வேலைநிறுத்தம் கடந்தபல மாதங்களாக நடைபெற்றும் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இதனால் செப்டம்பர் முதல் அகில இலங்கை தோட்ட உத்தியோகஸ்தர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாகியுள்ளனர். (ல-215)

## அகப்படுத்துங்கள்

கொழும்பு, ...நயட்டமகாடை "பப்டிஸ்ட்" மதப் பிரசார இல்லத்தில் நிகழ்ந்த கொடூரக் கொலை இந் நாட்டு மக்கள் யாவரையும் அதிர்ச்சியுறச் செய்ததோடு அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளது. இது ஏதோ வழக்கமாக இலங்கையில் நிகழும் கத்திக் குத்து, துப்பாக்கிச் சூடு போன்றது அல்ல. எனவே அதிகாரிகள் இப் படுகொலையைச் செய்த பழிகாரர்களை அகப்படுத்தி நீதியின் முன்பாக நிறுத்துதல் வேண்டும். இல்லையேல் சட்டத்தையும், நீதியையும் நம்பி வீடுகளில் வாழ்ந்து வரும் பெண்களோ, பிள்ளைகளோ, ஏன் ஆண்களோ மன நிம்மதியுடன் தங்கள் வீடுகளில் இரவு நேரங்களில் தூங்கிக் கொள்ள முடியாது. எனினும் இதில் பொலீசாரே எல்லாம் செய்வர் என்று நம்பியிருக்கக் கூடாது. நிகழ்ச்சியைச் சுற்றியுள்ளவர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவலையும் கொடுத்து உதவ வேண்டும்.

தந்தி



தமிழ் மூலம் ஆங்கிலம்
விலை ... 3/50 தபாற் செலவு ... /50
RAJ AGENCIES
76. KUMARAN RATNAM ROAD, COLOMBO 2.

## நினைப்பதெல்லாம் கைகூடுவதற்கு . . . .

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

### ஸ்ரீ ராம வாசனைப் புகையை

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

### ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்
நீலன் கந்தசாமி;
லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையில்....

# 62 பவுண் தங்க நகைகள் நள்ளிரவில் அபேஸ்!

### வெற்றுப் பெட்டி மட்டும் கண்டெடுக்கப்பட்டது

மன்னார், ஆக. 29

**வீட்டினுள் புகுந்த திருடர்கள் தலைமாட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைத் திருடிச் சென்று விட்டனராம். நகைகள் வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டி மறு நாள் காலையில் வீட்டிற்குச் சிறிது தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

அடம்பன் நெடுங்கண்டல் கிராமத்தில் அண்மையில் இரவு நேரத்தில் நடைபெற்றுள்ள இத்திருட்டுச் சம்பவத்தையிட்டு, பி. பெரியசாமி என்பவர், மாந்தைப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எம். சுப்பிரமணியத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். களவாடப்பட்ட 62 பவுண் நிறையுள்ள நகைகளின் பெறுமதி சுமார் ரூபா 8,000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது:—

சம்பவதினம் இரவு நெடுங்கண்டல் கிராமத்தில் வசிக்கும் பெரியசாமியும் குடும்பத்தினரும் இரவுச் சாப்பாட்டுக்குப் பின் படுத்துறங்கி விட்டனர். நடுநிசி வேளையில் அனைவரும் அயர்ந்து தூக்கத்தில் இருக்கும்போது, வீட்டினுள் புகுந்த திருடர்கள், பெரியசாமியின் தலைமாட்டில் இருந்த 62 பவுண் பெறுமதியான நகைகளை எடுத்துச் சென்று விட்டனராம்.

விடிந்ததும் நகைப் பெட்டியைக் காணாது பரபரப்படைந்து தேடுதல் நடத்திய பெரியசாமி, அவரின் வீட்டுக்குச் சிறிது தூரத்தில் நகைகள் வைக்கப்பட்டிருந்த சிறிய கைப்பெட்டி மட்டும் வீசப்பட்டுக் கிடந்ததைக் கண்டாராம். பெரியசாமி தினமும் படுக்கச் செல்லும் பொழுது இந்த நகைப்பெட்டியைப் பத்திரமாகப் பாதுகாக்கும் எண்ணத்துடன் தனது தலைமாட்டிலேயே வைத்துக் கொண்டு நித்திரை செய்வது வழக்கம் என்றும், சம்பவ தினமிரவும் இவர் இவ்விதமே செய்துள்ளார் என்றும் அறியப்படுகின்றது.

மாந்தைப் பிரிவுக் காரியாதிகாரி இது பற்றி விசாரணை செய்து வருகின்றார். (ல–185)

### தீ வைத்த வழக்கில் விடுதலை

திருகோணமலை, ஆக. 29

வடிவேலு முருகையா என்பவரின் 10,000 ரூபா மதிப்புள்ள வள்ளத்திற்கு நெருப்பு வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சேகு முகம்மது என்பவரை திருமலை நீதவான் திரு. விக்கிரமசேகரா போதிய சாட்சியமில்லாததால் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (ல–287)

### கஞ்சா வழக்கில் விடுதலை

திருகோணமலை, ஆக. 29

பொலீஸ் சாட்சியம் திருப்திகரமாக இல்லாத காரணத்தால், 2,760 கழஞ்சு கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நாகராசா என்பவரை திருமலை நீதவான் திரு. விக்கிரமசேகரா விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (ல–287)

### கள்ள நாணய வழக்கில் எதிரிகளுக்குப் பிணை

கள்ள ஒரு ரூபா நாணயங்களை தயாரிப்பதில் ஈடுபட்டார்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரு பெண் உட்பட நால்வர் தலா இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நீதவான் திரு எஸ். ஜீ பி. பெர்ணண்டோவே சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்து மறுவிசாரணையை செப்டம்பர் 24-ம் திகதிக்குப் பின் போட்டுள்ளார்.

விசேஷ துப்பறியும் பிரிவு சார்ஜன்ட் ரி. எல். ஜமலென் நீதவான் முன்னிலையில், "சந்தேக நபர்களான இந் நால்வரைக் கைது செய்த போது, இவர்களால் தயாரிக்கப்பட்ட 77 ஒரு ரூபா கள்ள நாணயங்களையும், அவை தயாரிப்பதற்கு பாவிக்கப்பட்ட யந்திரங்கள், மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றி உள்ளோம். இது சம்பந்தமான தகவல்கள் அட்டோர்ணி ஜெனரலின் கவனத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது. அவரது பதிலைத் தொடர்ந்தே வழக்குத் தாக்கல் செய்வது பற்றி முடிவு செய்யப்படும்" என்று தெரிவித்தார்.

கள்ள நாணயம் தயாரித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஹிங்குலயைச் சேர்ந்த உடமக்கடவற கிராமத்தில் வசிக்கும் பி. சிறிசேன, உடுகெதர மெண்டிஸ், எஸ். சோமாவதி, பி. வமின்துவ ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டோர்களாவர்.

இவர்கள் ஒரு ரூபா நாணயங்கள் தயாரித்ததுடன், 50 சத, 25 சத நாணயங்களைத் தயாரிக்க முயற்சி செய்துள்ளதாகவும் பொலீசார் கருதுகின்றனர்.

இந் நால்வருள் சோமாவதி, சிறிசேனவின் மனைவி. வமன்துவ என்பவர் சிறிசேனவின் தந்தை ஆவார். (ம–7)

### பன்றி ஈன்ற குட்டி ஒன்று யானை போல் இருக்கிறது

சென்னை, ஆக. 29

பன்றி ஒன்று ஈன்றெடுத்த குட்டி விந்தையாக இருந்தது.

இதை குறுயானை என்று அழைக்கலாம். ஆறு அங்குலம் நீளம். தலை குண்டாக இருந்தது. தும்பிக்கை போல் ஒன்று மூக்கில் இருந்து தொங்கியது. வாயிலிருந்து மூன்று பற்கள் துருத்திக் கொண்டிருந்தன. யானையின் தந்தங்கள் போல் தோன்றின.

வியாசர்பாடி கல்யாணபுரம் இரண்டாவது தெருவில் உள்ள ஒருவர் வளர்க்கும் பன்றி, இம்மாதிரி குறுயானையை ஈன்றது. ஆனால் இந்த விந்தைப் பிறவி உடனே மரித்து விட்டது. வியாசர்பாடியிலும் சுற்று வட்டாரத்திலும் உள்ள மக்கள் இதைக் காண குழுமினர்.

பன்றி ஈன்றெடுத்த மற்றிரு சாதாரண குட்டிகள் உயிரோடு உள்ளன. ஜீவகாருண்ய சங்கத்தினர் உடனே வந்து அதிசயப் பிராணியைப் பெற்றுக் கொண்டனர். சென்னை கால்நடை மருத்துவமனையில் குறுயானை தைலத்தில் பாதுகாக்கப்படும். கால்நடை மருத்துவ நிபுணர்கள் இதை ஆராய்ச்சிக்காக வைத்துக் கொள்வார்கள். (ம)

### கர்ப்பிணி மரணத்துக்கு கணவனுக்கு எச்சரிக்கை

பதுளை, ஆக. 29

"கர்ப்பிணியாக இருக்கும் வேளையில் மனைவிமாரின் ஆரோக்கியத்தை கணவன்மார் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு சத்துள்ள உணவு வகைகளைத் தெரிந்து கொடுக்க வேண்டியது கணவன்மாரின் தலையாய கடனாகும். பண்டாரமெனிக்கா, இறந்ததற்கு அவளின் கணவனே காரணம் என்பது என் அபிப்பிராயம்."

பதுளை ஆஸ்பத்திரியில் பிரசவ நிலையில் அனுமதிக்கப்பட்ட 35 வயதான டி. எம். பண்டார மெனிக்கா என்றபெண் பலவீனம் காரணமாக மரணமடைந்தது பற்றி மரண விசாரணை நடைபெற்றது. அப்போது பதுளை மரண விசாரணை அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறந்த பெண்ணின் கணவனை ஹிங்குருகடுலவைச் சேர்ந்த டி. எம். சுதுபந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

சம்பவம் நடந்த தினம் காலை இறந்தவர் வாந்தி எடுத்தார். அவ் வேளையில் அவர் ஒன்பது மாதக் கர்ப்பிணி.

இங்கே உடனே நான் இறந்தவரைக் கூட்டிச் சென்று ஹிங்குருகல ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அங்கிருந்து அவர் பசறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கும் அவரது நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் பதுளை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தின் பின் அவர் இறந்துவிட்டார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜெயசேன பிரேத பரிசோதனை நடாத்தினார். அவர் தமது அறிக்கையில் "பிரசவ காலத்தில் ஏற்பட்ட பலவீனத்தால் மரணம் சம்பவித்தது" எனத் தெரிவித்திருந்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி கணவனை எச்சரித்து அனுப்பினார். (ல–7)

### 'மனைவிபறி' கிளர்ச்சி செய்ய பிரமச்சாரிகள் திட்டம்!

மோகா, ஆக. 29


இந்தியாவில் நிலப்பறி கிளர்ச்சி நடக்கிறது அல்லவா? அதுபோல, மனைவிகள் பறிக் கிளர்ச்சியை நடத்த பெரோஸ்பூர் ஜில்லாவில் நிரந்தர பிரம்மசாரிகள் கோஷ்டி ஒன்று திட்டமிட்டு வருகிறது.

மோகாவில் ஒரு தர்ம சத்திரத்தில் ரகசியமாகக் கூடி தங்களது திட்டத்தை விவாதித்ததாக 55 வயது நிரம்பிய ஒரு பிரம்மசாரி கூறினார்.


"நிலப்பறிக் கிளர்ச்சிக்காரர்களைவிட ஒருபடி அதிகமாகச் செல்ல நாங்கள் விரும்புகிறோம்" என்று அவர் சொன்னார்.

நிரந்தரமாக பிரம்மசாரிகளாக இருப்பவர்களுக்கு சமையல் செய்து போட மனைவி கிடையாது. ஆனால் ஒருத்திக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்ட ஆசாமிகள் இருக்கிறார்கள். இத்தகைய ஆசாமிகள் தங்களது மனைவிகளில் ஒருத்தியைத் தவிர மற்ற எல்லா மனைவிகளையும் விவாகரத்து செய்து விடுமாறு செய்வதற்கு மனைவிகள் பறி கிளர்ச்சியை பரப்புவதென்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்று அவர் சொன்னார். (ம)

### குறும்புக்காரச் சுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மடல் - (3)

**அண்ணு,**

ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் எல்லாம் சென்னையிலே கூடி அந்தக் கூட்டத்தில் எனக்கு வழியனுப்பு விழா நடத்திஞர்கள். கட்சி சார்பற்ற முறையில் அவர்கள் காட்டிய அன்பும், வழங்கிய வாழ்த்துரையும் – நீ அடிக்கடி வலியுறுத்துவாயே, அந்த அரசியல் பண்புக்கு எடுத்துக்காட்டாக இருந்தன. ஒன்றியங்களின் தலைவர்களில் முக்கால் பகுதிக்கு மேற்பட்டோர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அல்லது காங்கிரசின் ஆதரவாளர்கள். கழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் என்று நமது அம்பிலும், அறந்தாங்கி ராஜனும், கமலநாதனும், இன்னும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருந்தான் எனினும், அனைவரும் ஒன்றியத் தலைவர்கள் என்ற முறையில் ஒன்றியிருந்து உளம் கனிந்த பாராட்டுக் [illegible].

இந்த மடலை உனக்கு நான் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. இது வரையில் நூற்றி ஐம்பத்து எட்டு இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கழகத்தினர் எழுபத்தி மூன்று பேரும் கழக ஆதரவில் ஆறு பேரும் ஆக எழுபத்தி ஒன்பது பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் காங்கிரஸ் நாற்பத்தி ஒன்று என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சிச் சார்பில் போட்டி இடை யாது என எல்லாக் கட்சிகளும் அறிவித்திருந்தன– எனினும் போட்டியிட்டவர்களில் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கவே செய்தனர்- தொடக்கத்தில் சில இடங்களில் காங்கிரஸ் நண்பர்கள் வெற்றி பெற்ருர்கள் என்று செய்தி வந்ததும் நம் மீது எரிச்சல் கொண்ட ஏடுகள் – காங்கிரஸ் வெற்றி! காங்கிரஸ் வெற்றி! ! என கர்ச்சிக்கத் தொடங்கின- அடுத்து கழகத்தினர் பல இடங்களில் வெற்றி முரசு கொட்டத் தொடங்கினர். 1967-க்கு முன்பு ஆயிரம் ஊராட்சி மன்றங்களைப் பெற்றிருந்த நமக்கு மூவாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட ஊராட்சிகளும் அத்துடன் கழக ஆதரவாளர்கள் வென்ற பல ஊராட்சிகளும் கிடைத்தன- ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஊராட்சிகளைப் பெற்றிருந்த காங்கிரசுக் கட்சியினர் மூவாயிரத்துக்கு குறைந்த ஊராட்சிகளையே இப்போது பெற்றனர்-இந்த முடிவை அவர்கள் அறிந்தார்கள் எனினும், அம்பலத்தில் கூறிட கூச்சமுற்றனர்!

"ஏண்டா தம்பி! போஞல் போகிறது என்று நீ தான் விட்டிருக்கக் கூடாதா?" என்று நீ கேட்பாய் அண்ணு; அது எனக்குத் தெரியும்- கேட்கும் போதே உன் இதழில் புன்னகையும் நெளியும்- ஆனல் அண்ணு; வெற்றி தோல்விகளைப் பற்றி எதுவும் சொல்லாமல் நாங்கள் முதலில் வாயை மூடிக் கொண்டுதான் இருந்தோம்-

ராம் சுபாக் சிங்கைத் தெரியும் அல்லவா அண்ணு உனக்கு? நீ இருக்கும் போதே மத்திய அரசில் ஓர் அமைச்சர்- இப்போது அவர் அமைச்சர் அல்ல; நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியின் தலைவர்- இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் முடிந்து டில்லியிலும் காங்கிரஸ் எதிர்க் கட்சியாகி விட்டது என்று எண்ணி விடாதே! காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து ஒன்று ஆளுங் கட்சியாகவும் ஒன்று எதிர்க் கட்சியாகவும் இருக்கிறது. அந்தக் கதையைப் பிறகு எழுதுகிறேன்- அந்த எதிர்க் கட்சியின் தலைவர் ராம் சுபாக், திடீரென்று டில்லிப் பட்டணத்திலே நிருபர்களைக் கூட்டினர்- நிருபர்களும் ஆவலோடு ஓடோடி வந்தனர்-

"அகோ! வாரும் பிள்ளாய் நிருபர்களே! இன்று ஓர் அதிசயத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன்- அமெரிக்காவை கண்டு பிடிக்கக் கொலம்பஸ் கூட இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்க மாட்டான். சிரமத்தின் விளைவாகக் கிடைத்த சிலவற்றை உங்களிடம் கொட்டப் போகிறேன்."

**கலைஞர் மு. கருணாநிதி**

ராம் சுபாக் சிங்கின் முழக்கத்தைக் கேட்டு நிருபர்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டு, எழுதுகோல்களைக் கையில் பிடித்தவாறு ஆவலைத் தேக்கிய முகங்களுடன் அந்த அதிசய செய்திக்காகத் துடித்தனர்-

"தமிழ்நாட்டில் நடந்த ஊராட்சி மன்றத் தேர்தல்களில் காங்கிரசுக்கே அமோக வெற்றி!"

— இது ராம் சுபாக்

"அப்படியா? சுயேச்சைகள் முதல் வரிசையிலும் கழகத்தினர் இரண்டாவது வரிசையிலும், காங்கிரஸ் மூன்ருவது வரிசையிலும் வந்திருப்பதாகத்தானே எங்களுக்கு ஆதார பூர்வமான தகவல்! அப்படித்தானே தமிழ் நாட்டு ஏடுகளில் செய்திகள் வந்திருக்கின்றன!"

இந்த ஐயத்தை நிருபர்கள் எழுப்பியதும், நெருப்பில் விழுந்த புழுப் போல் துடித்து ராம் சுபாக் சிங் பதில் கூறிஞர்-

"நிருபர்களே! நீங்கள் எல்லாம் இந்திரா காங்கிரசுக்கு எதிரிகள்தானே; அப்படியாஞல் நான் சொல்வதை எழுதிக் கொள்ளுங்கள்-"

"நாங்கள் எந்தக் காங்கிரசும் இல்லை- எங்கள் பத்திரிகை அதிபர்கள் இங்கே இந்திராவுக்கு எதிரிகள். தமிழ் நாட்டில் தி- மு- க- மீது வெறுப்புக்கொண்டவர்கள்."

— இது நிருபர்கள்!

"பேஷ்! பேஷ்! அப்படியாஞல் கோயபல்ஸ் அறிவிப்புக்களை ஜெர்மானியப் பத்திரிகைகள் வெளியிட்டதைப் போல என் அறிவிப்பையும் நீங்கள் வெளியிட தயங்கக் கூடாது."

"தங்கள் சித்தம்! எங்கள் பத்திரிகைகளின் பாக்கியம்!"

"இதோ, குறித்துக் கொள்ளுங்கள் — காங்கிரசுக்குக் கிடைத்த இடங்கள் நாற்பத்து ஆறு சத விகிதம்! தி- மு- க-வுக்கு முப்பத்தி நான்கு சத விகிதம்!"

"இந்தப் புள்ளி விபரம் தங்களுக்கு யார் கொடுத்தது?"

— ஒரு நிருபர்.

"உன் பாட்டன் கொடுத்தான்! சொல்வதை எழுதிக்கொள்-"

"46-ம் 34-ம் எண்பது சதவிகிதமாகிறது! அப்படியாஞல் அதிக இடங்களைப் பெற்ற சுயேச்சைகள் எத்தனை சதவிகிதம்? காங்கிரசும் கழகமும் 80 சத விகிதமாஞல் ஐயாயிரம் இடங்களைப் பெற்ற சுயேச்சைகள் இருபது சதவிகிதந் தாஞ? சுயேச்சைகளிலும் பலர் தி-மு-க- ஆதரவாளர்களாமே?"

— இப்படி ஒரு நிருபர்.

"நிஜலிங்கப்பா சாட்சியாக நான் சொல்வது அத்தனையும் நிஜம்!"

என் அருமை அண்ணனே! இப்படி ஒரு பேட்டி டெல்லியிலே நடந்ததோ என்னவோ, ராம் சுபாக்சிங் கூறிய ற்பனையின் அடிப்படையில் டெல்லி வட்டாரத்து இதழ்களும், தமிழகத்து ஏடுகளும், தி- மு- க- சரிந்துவிட்டது என்று குதூகலிக்கத் தொடங்கின.

அதற்குப் பிறகுதான் உண்மை நிலைமை ஊருக்கு உரைக்கவேண்டிய அவசியம் எனக்கும் ஏற்பட்டது. அடடா! அந்த ஆதாரமற்ற கூற்றை நம்பிக்கொண்டு இரண்டு மூன்று நாட்கள் இங்கே சில பேர் போட்ட குதியாட்டம் இருக்கிறதே; அதனை விளக்க முடியாதண்ணு விளக்க முடியாது! ஒரு பட விழாவில் ஒரு நகைச்சுவை நடிகர்; காமராஜர் இளமையாகிக் கொண்டு வரு[...] அதன் ரகசிய[...] தெரியுமா? – [...] ரண்டில் தெரியு[...] ராம்! உடனே[...] கூடியிருந்தோர் [...] நடிகர் எழு[...] இரண்டு பொது[...] தலைக் குறிப்பிட்[...] கருதிக் கையொ[...] தார்களாம்! பிற[...]



நடிகர், யா[...] சொன்னராம், [...] எழுபத்திரண்டு [...] தைக் குறிப்பிட்[...] அதை அவர்கள்[...] லாக எடுத்து[...] டார்கள்" என்று[...]

ராம் சுபாக்சி[...] லியிலே விடுத்[...] கையும் அதனை[...] நடந்த ஆர்ப்பா[...] இப்போதுதான் [...] சிறிதாக அடங்கி[...] றது.

ஒன்றியத்தினா[...] வழியனுப்புப் ப[...] பற்றிக் குறிப்பி[...] நான் எங்கேயோ[...] இழுத்துக் கொ[...] வந்துவிட்டேன்.

'அயல்நாடு பு[...] எனக்கு நமது [...] பெரியார் த[...] அதிகாரிகள் ப[...] அசோகா ஓ[...] விருந்தொன்று [...] னர். அங்கு என்னை[...] பேசிய யார்[...] 'அண்ணு, உன்னை[...] பேச மறந்த[...] யாருமே மறக்க[...]

'ஆண்களைப் [...] பெண்களும் [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ில் அரசியல் ...ண்ணேட்டம்

...டத்த
...ற்பத்து
...ம்! தி-
...ப்பத்தி
...நம்!"

...ளி விப
... யார்

... நிருபர்.

...ட்டன்
... சொல்
...ள்-"

...ண்பது
...ு! அப்
... இடங்
...யேச்சை
... சதவிகி
...ம் கழக
...விகிதமா
...ம் இடங்
...யேச்சை
...தவிகிதந்
...ச்சைகளி
...க- ஆதர
..."

... நிருபர்.

... சாட்
...சால்வது
...ம்!"
... அண்
...டி ஒரு
...ல்லியிலே
...னவோ,
...ங் கூறிய
...ப்படை
... வட்டா
...ம், தமி
...ம், தி-
...விட்டது
...லிக்கத்

...றகுதான்
...லைம
...க்கவேண்
...எனக்கும்
...அட்டா!
...தாரமற்ற
...கொண்டு
...று நாட்
...சில பேர்
...யாட்டம்
... அதனை
...தண்ணு
...து! ஒரு
...ல் ஒரு
...டிகர்;காம
...மையாகிக்

கொண்டு வருகிறுர் - அதன் ரகசியம் என்ன தெரியுமா? - எழுபத்திரண்டில் தெரியும் என்றுராம்! உடனே அங்கு கூடியிருந்தோர் அந்த நடிகர் எழுபத்திரண்டு பொதுத் தேர்தலைக் குறிப்பிட்டதாகக் கருதிக் கைெயாலி செய்தார்களாம்! பிறகு அந்த



நடிகர், யாரிடமோ சொன்னுராம், "நான் எழுபத்திரண்டு என வயதைக் குறிப்பிட்டேன் - அதை அவர்கள் அரசியலாக எடுத்துக்கொண்டார்கள்" என்று!

ராம் சுபாக்சிங், டெல்லியிலே விடுத்த அறிக்கையும் அதனையொட்டி நடந்த ஆர்ப்பாட்டமும் இப்போதுதான் சிறிது சிறிதாக அடங்கி வருகிறது.

ஒன்றியத்தினர் தந்த வழியனுப்புப் பாராட்டு பற்றிக் குறிப்பிட வந்த நான் எங்கேயோ உன்னை இழுத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

அயல்நாடு புறப்பட்ட எனக்கு நமது அய்யா பெரியார் தலைமையில் அதிகாரிகள் பலர் கூடி அசோகா ஓட்டலில் விருந்தொன்று அளித்தனர். அங்கு என்னைப்பற்றி பேசிய யார்தான் அண்ணு, உன்னைப்பற்றிப் பேச மறந்தார்கள்? யாருமே மறக்கவில்லை-

ஆண்களைப் போலவே பெண்களும் உரிமை பெற்று விளங்க வேண்டும் என்று பெரியார் குறிப்பிட்டு, முதலில் நாகம்மையார் ஆண்கள் இருக்கும் இடத்திற்கே வரமாட்டார்; பிறகு யாராவது அயல்நாட்டார் வந்தால்கூட அவர்களோடு கைகுலுக்கவும் நான் அவர்களைப் பழக்கிவிட்டேன் என்று அவர் கொச்சை மொழியில் கூறியபோது நீ அருகில் இருந்திருந்தால் அதனை எவ்வளவு ரசித்திருப்பாய். விருந்தில், தான் மட்டுமே இலையில் ஒன்றும் மிச்சம் வைக்காமல் சாப்பிட்டதாகவும், மற்றவர்கள் நிறைய பண்டங்களை மிச்சம் வைத்துவிட்டதாகவும் பெரியார் குறைகூறிச் சொற்பொழிவாற்றிய போது அவ்விடத்தில் என் அண்ணணே! நீ இருந்திருந்தால் நமது என்-வி-என்- அவர்களைப் பார்த்து "ஏனய்யா! நீ இலையைக் கூட மிச்சம் வைக்கவில்லையே? அதைக் கவனிக்காமல் பேசுகிறுரே!" என்று கேலி பேசியிருப்பாயே!

நீ சிந்தித்து உருவாக்கிய சீரணிக்கு இப்போது பொறுப்பேற்றுள்ள அமைச்சர் என்-வி- என்-தான்!

அந்தச் சீரணித் தொண்டர்கள் சார்பிலும் ஒரு மாபெரும் வழியனுப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நீ பெருமதிப்பு வைத்துப் புகழ்ந்து பேசுவாயே; அந்தப் பெரியார், ஏ- எல்- முதலியாரும் விழாவுக்கு வந்திருந்து, உன் தம்பிகள் நாங்கள் நடத்துகிற அரசுக்குப் பாராட்டு கூறினுர். சிரிக்கச் சிரிக்கப் பேசி மேலவையில் மேன்மை மிகு கருத்துக்களை வழங்குவாரே பால சுப்பிரமணிய அய்யர்; அவர் பேசும்போது உன் அழகுத் தொந்தி குலுங்கக் குலுங்கச் சிரிப்பாயே; அவரும் சீரணியினர் நடத்திய அந்த விழாவில் கலந்து கொண்டு எனக்கு வாழ்த்து குவித்தார். அன்றுதான் அரசாங்க சார்பில் தமிழரசு எனும் இதழ் வெளியிடப்பட்டது- விழாவில் பேசிய ஏ- எல்- முதலியார் ஆங்கிலத்தின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டு அதனை வலியுறுத்திப் பேசினுர்- அடுத்துப் பேசிய சிலம்புச் செல்வர் ம- பொ- சி- தமிழின் தனிப் பெருமையை எடுத்துரைத்து தமிழால் எல்லாம் முடியும் என முழக்கமிட்டார். என் வழியனுப்பு விழாவில் வம்புக்கு இடமிருக்கக் கூடாதே என்பதற்காக; "தமிழரசு" ஏட்டினை வெளியிட்ட நான் அதன் தமிழ்ப் பதிப்பை ஏ- எல்- முதலியார் அவர்களிடமும், ஆங்கிலப் பதிப்பை ம- பொ- சி- அவர்களிடமும் அளித்தேன்- அந்தப் பெருந் தகையாளர்கள் என் கருத்தைப் புரிந்து கொண்டு மகிழ்ச்சி பூத்தனர். மக்கள் கடல் ஆரவாரம் செய்து, அதனை வரவேற்றது. அங்கு நீ இருந்திருந்தால், "குறும்புக்காரன்" என்று என் முதுகில் ஓங்கித் தட்டியிருப்பாயே: அய்யோ அந்த "ஸ்பரிசம்" பட்டு எத்தனை மாதங்கள் ஓடிவிட்டன.

சீரணி அமைக்கிறேன் என நீ செப்பிய போது "அது ஓர் செங்காவல் படை" என்றனர். "பொறுத்து இருந்து பாருங்கள் புரியும்!" என்று குறுநகை தவழச் சொன்னுய். கோபம் கொப்பளிக்கப் பேசியவர்கள் உன் பதில், எப்படிச் செயல்படப் போகிறது பார்க்கலாம் எனக் காத்திருந்தனர்-

இன்று சீரணியினரின் சாதனைகள் — எழுதி மாளாது! எத்தனை பள்ளிகள்! எத்தனை சாலைகள்! எத்தனை குளங்கள்!

அண்ணு, சென்னைக் கடற்கரையில் லட்சக் கணக்கானேர் மத்தியிலே பேருரையாற்றுவாயே; பேருரையா அது? மகுடியென்பர் சிலர்! மலர் மணம் மொண்டு வரும் தென்றல் என்பர் சிலர்! மந்த மாருதம் என்பர்! குழலின் ஓசை எனக் கூறுவர் — கொஞ்சுகிறது தமிழ்! என்னை எடுத்து ஆள்க எனக் கெஞ்சுகிறது சொல் என்றெல்லாம் புகழ்வார்களே; அந்தப் பெருமை மிகு பேச்சுக்குச் சொந்தக்காரனே! நீ அடிக்கடி பேசும் அந்த இடத்தில் இப்போது ஒரு நிரந்தர மேடையே கட்டி வைத்திருக்கிறேம். சீரணி மேடை அதன் பெயர்!

அந்த மேடைக்கு நேராகத்தான் வங்கக் கடற்கரையின் வடக்கு திசையில் இப்போது நீ தூங்கிக் கொண்டிருக்கிறுய்.

சென்னை மாநகர் வழியனுப்பு விழாக்களில் விடை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல; என்னை ஈன்ற தாயின் அன்பு புதையுண்டிருக்கும் காட்டூருக்கும், அந்தத் தாய் என் தந்தையுடன் நடத்திய இல்வாழ்வின் சிறப்பு கூறும் சிற்றூராம் திருக்குவளைக்கும், நான் சென்று வந்த செய்திகளையெல்லாம் உனக்குச் சொல்ல வேண்டாமா? இந்தச் சேதிகளையே சொல்லிக் கொண்டிருந்தால் எப்போதப்பா அயல்நாடு போய் அரசியல் கண்ணேட்டம் பற்றிக் கூறப் போகிறுய் என்று கேட்டு விடாதே அண்ணு! உன்னை நினைத்து விட்டால் உன்னைப் பற்றி எழுதாமல் வேறு எழுத என்கை ஓட மறுக்கிறதே! உன் கல்லறைப் பக்கம் வந்து விட்டால் அங்கிருந்து நகர என் கால்கள் சம்மதிப்பதில்லையே!

என் குற்றமா அண்ணு அது?

ஞாயிறன்று அடுத்த மடல் தீட்டுகிறேன்.

தம்பி,

—கருணாநிதி

# கல்கத்தாவில் பொலீஸ் சூடு!

கல்கத்தா, ஆக. 29.

கல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் செய்த அரசாங்க ஊழியர் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் மாண்டார்.

மேற்கு வங்காளத்தில் கடந்த மூன்று தினங்களாக 2 லட்சம் அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தம் நேற்று முடிவடைந்தது.


வேலைநிறுத்தம் செய்யாதவர்கள் தாக்கப்படக்கூடும் என்ற அச்சத்தில் அரசாங்கக் காரியாலயங்களில் பொலீஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தக்காரர்களின் ச... பளம் வெட்டப்படும் என ... சாங்கம் ஏற்கனவே ப... இருக்கிறது.

ஆனல் பழிவாங்கப்பட்... மீண்டும் வேலைநிறுத்தம் செய... போவதாய் ஊழியர்கள் எச்சரி... திருக்கிறுர்கள்.

(...)





ஆண், பெண் இருபாலரும் நிர்வாணமாக வாழ்வதற்குப் பழகினல் பல பிரச்சினைகள் தீருமெனவும் இதனல் உடல்வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் மேலைநாட்டு விஞ்ஞானிகள் சிலர் கண்டுபிடித்துள்ளனர். விஞ்ஞானிகளின் இக்கூற்றை மெய்ப்பித்துக் காட்டவோ என்னவோ மேல்நாடுகளில் ... "ஒன்றுக வாழ்வதற்கு வாண காலனிகள்" ஆரம்... கப்பட்டுள்ளன. மேல்... தில் அத்தகைய காலனி... றின் பூங்காவில் குமரிப்... கள் சிலர் நிர்வா... விளையாடிக் கொண்... றனர். கீழ்ப்படத்தில் ... சமையல் செய்கிறுள். ... அதைப் பார்த்துக் கொ... இருக்கிறுள்.

(...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா திரும்புவோரின் நலனுக்காக

# புனர்வாழ்வுத் திட்டம் பற்றி ஆராய்ந்து அறிவது அவசியம்

## ஐ.தொ.கா.நிதிக்காரியதரிசி பத்திரிகைகளுக்கு அறிக்கை

"தாயகம் திரும்புபவர்களின் நலனுக்காக இந்திய அரசு ஏற்படுத்தியுள்ள புனர்வாழ்வுத் திட்டங்களைப் பார்வையிட, தொழிற் சங்கத் தூது கோஷ்டி செல்ல வேண்டியது அவசியமா? என்றும், அது ஒரு சூழ்ச்சித் திட்டம் என்றும் பத்திரிகையில் அறிக்கை விடுபவர்கள், தன் கண்கள் இரண்டும் பழுதானாலும் சரி எதிரியினுடைய கண்கள் ஒன்றையாவது பழுதாக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இப்படிச் செய்கிறார்கள்."

இவ்வாறு ஐ. தொ. கா. உதவி நிதிக் காரியதரிசி திரு. பாலகிருஷ்ணன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தன் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகள் அனைத்தையும் மக்கள் நம்புவதாக இருந்திருந்



தால் ... பொதுத் தேர்தலின் பின் ஆட்சி பீடம் ஏறியிருக்கும். இன, மொழி, துவேஷத்தைக் கிளப்பிவிட்ட சிலரும் பயன் பெற்றிருப்பர். ஆனால் மக்களுக்குப் பகுத்தறிவு உண்டு என்பதும், சில பத்திரிகைகளின் செய்திகளால் மக்களை ஏமாற்ற முடியாது என்பதும் பொதுத் தேர்தலில் தெரிய வந்துள்ளது.

"புனர்வாழ்வுத் திட்டம்" பற்றி இந்தியத் தூதுவராலயம் பல பிரசுரங்களை வெளியிட்டிருப்பதும், பத்திரிகைகள் வாயிலாக செய்திகள் வெளியிடுவதும் ஏதோ உண்மைதான், என்றாலும் இவற்றை மக்கள் கண் மூடித்தனமாகப் பின்பற்றுவதை ஐ. தொ. கா. என்றும் விரும்பியதில்லை. புனர் வாழ்வுத் திட்டம் பத்திரிகை அளவில்தான் இருக்கிறதா?, அல்லது செயலளவிலும் இயங்குகிறதா என்பது இன்றைய முக்கியப் பிரச்சினையாகி விட்டது. புனர் வாழ்வுத் திட்டம் என்ற ஆசையில் இந்தியா சென்ற சிலர் எத்தகைய துன்பத்திற்காளானார்கள் என்பதை சில பத்திரிகைகள் முதல் பக்கச் செய்திகளாக வெளியிட்டன.

இந்தியத் தூதுவராலய பிரசுரங்களின் படியும், அவர்களின் அறிக்கைகளின் படியும் புனர் வாழ்வுத் திட்டத்தைப் பற்றியும் அதன் படி வழங்கப்படும் வசதிகளும் தெளிவுபடுத்தப்பட்ட அதே வேளையில், இந்தியா சென்ற சிலர் புனர் வாழ்வுத் திட்டம் பற்றி குறைப்பட்டுக் கொண்டுள்ளனர் என்பது பத்திரிகைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன.

எனவே புனர் வாழ்வுத் திட்ட விஷயத்தில், தாயகம் திரும்புபவர்கள், இத்தகைய முரண்பாடான கருத்துக்களில் சிக்கித் தவிக்கின்றனர். இத்தகைய முரண்பாடுகளைத் தெளிவுற ஆராய்ந்து, தாயகம் திரும்புபவர்களுக்கு சரியான விளக்கத்தை அளிப்பதுதான் எமது நோக்கமன்றி, சந்தர்ப்பவாதம் பேசுவோர்களைப் போல சூழ்ச்சித் திட்டத்தில் இறங்குவது என்ற அவர்களின் தப்புக் கணக்குக்காக அல்ல.

ஐந்தாண்டு காலம் அரசோடு கொஞ்சி விளையாடிய அவர்கள் செய்யத் தவறி விட்டதால், நாங்கள் செய்யும் போது இதை மூடி மறைக்கவும், அவர்கள் மலை நாட்டு மக்களுக்குச் சேவை செய்தனர் எனக் காட்டவும் தான் இத்தகைய அறிக்கைகளை வெளியிடுகின்றனர். உண்மையிலேயே புனர் வாழ்வுத் திட்டம் என்ற பெயரில் எவ்வித தெளிவான விளக்கமுமின்றி, இந்தியா செல்பவர்கள் துன்பப்படக் கூடாது என்பது தான் ஐ. தொ. காவின் கருத்தாகும். இதைப் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் விளக்கிய போது ஐ. தொ. காவின் முடிவை அவர் பெரிதும் வரவேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த போது 4,000 பேருக்கு மட்டுமே இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்து 100 நாட்களில் 3,500 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினரை விட, ஐக்கிய முன்னணி அரசு பிரச்சினையைத் தள்ளிப் போடாமல், பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்ந்துள்ளது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திரு. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

(ல)

## எம்.பி.க்கு மகஜர்

புங்குடுதீவு, ஆக. 29

"சரவணை - புளியங்கூடல் சந்தியில் உப பொலீஸ் நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டும். இதற்கு ஆவன செய்யுங்கள்."

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை சரவணை தமிழரசு வாலிப முன்னணி ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

(ல-249)

## காரும், பணமும் கொள்ளை

மாவனல்லை, ஆக. 29

இரவு நேரத்தில் தனிமையான ஓர் இடத்தில்வைத்து 13,000 ரூபா பெறுமதி வாய்ந்த ஒரு காரையும் 2,625 ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று கடுகண்ணாவை பகுதியில் நிகழ்ந்துள்ளது.

(ல-202)

## பட்டப்பகலில் தேங்காய் திருடி உதை வாங்கினான்

நிந்தவூர், ஆக. 29

தேநீர்க் கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த சில தேங்காய்களை பட்டப் பகலில் திருடிய வாலிபன் ஒருவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு நையப்புடைக்கப்பட்டான்.

இச் சம்பவம் நிந்தவூர் 5-ம் குறிச்சியைச் சேர்ந்த தேநீர்க் கடை ஒன்றில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம்பற்றி மேலும் கூறப்படுவதாவது:—

"சம்பவ தினம் கடையின் பின் பகுதியில் இரண்டு, மூன்று தேங்காய்கள் வைக்கப்பட்டிருந்ததாம்.

தேநீர் அருந்திக் கொண்டிருந்த வாலிபன், உரிய பணத்தைச் செலுத்திவிட்டு கடையை விட்டு வெளியேறி நாசுக்காக பின்பகுதிக்குச் சென்று பிணைக்கப்பட்டிருந்த தேங்காய்களை கிளப்பிக் கொண்டு கம்பி நீட்டியிருக்கிறான்.

இந்நிலையில் கடை முதலாளியும் முன் பக்கத்தில் அலுவலாக இருந்ததால் இதைக் கவனிக்கத் தவறிவிட்ட வேளையில், வேறு சில வாலிபர்கள் "கைங்கரியத்தைக்" கண்ணுற்று கையும் மெய்யுமாக மடக்கிப் பிடித்துள்ளனர்.

செம்மையாக உதை வாங்கிய வாலிபனை சில பெரியவர்கள் பிரித்து ஓட்டம் பிடித்து வைத்தனராம்.

(ல-217)

## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். திரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிச வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம், அண்ட வாதம், இடுப்பு வாதம், குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி, சிரங்கு, அல்லது குட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம். தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-, தபால் செலவு சதம் -/90,

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு

### ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல், சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள், வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.

### நவீன முறை சிறிய கை மெசின்

இலவசம்! எம்பிராய்டரி கத்தரி ஒன்று, எம்பிராய்டரி புத்தகம் ஒன்று, வளையல் ஒரு சோடி, அல்லது புதிய மோஸ்தர் காதணி இலவசம். பெண்மணிகளே! இதோ எம்பிராய்டரி பூக்கள் தைப்பதற்கு எம்பிராய்டரி கை மெசின் ஒன்று. இந்த மெசின் மூலம் எந்தவிதமான துணியிலும் மிருகங்கள், பறவைகள், எழுத்துக்கள் பூக்கள் ஆகிய மோஸ்தர்களை மிகவும் அழகாகவும், தெளிவாகவும் தைத்துக் கொள்ள முடியும். இதன் விலை ரூபாய் 3-50. இந்த மெசினுடன் மேற்குறிப்பிட்ட பரிசுகள் இலவசமாக கொடுக்கப்படும்.

வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

[நீங்களும் தாமதமின்றி இன்றே எழுதுங்கள்!]

*Manager*
**SEWING DEPARTMENT (TH)**
**Central Suppliers, Dehiwala.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனைக் கொன்றதாக மனைவி மீது வழக்கு

# பேயோட்டத்தின் பின் தகப்பனார் மரணம்!

## மகன் சாட்சியம்

"அன்றிரவு சுகவீனமுற்றிருந்த எனது இளைய சகோதரனுக்கு "பேய் ஓட்டம்" நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது நன்றாகக் குடித்து விட்டு அங்கு வந்த எனது தகப்பனார் குழப்பம் விளைவித்தார்.

"நான் விரைவாகவே படுக்கைக்குச் சென்றேன். ஆனால் வீட்டில் ஏற்பட்ட பெருத்த சத்தத்தினால் எழுந்து என்ன சத்தம் என்று பார்த்தேன். எனது தகப்பனார் மருந்து அரைக்கும் கல்லின் மேல் விழுந்து கிடக்கக் கண்டேன்".

ஹொரதொல்ல கொலை விசாரணை கம்பஹா மேலதிக நீதவான் திரு. ஜே. ஏ. சி. ஆகஸ்டின் டி. சில்வா முன் நடைபெற்ற போது காலஞ்சென்றவரின் மகனை ஏ. ஏ. சோமபாலா என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில் ஏ. ஏ. ஜெமிஸ் என்பவரை ஏப்ரல் மாதம் 5ம் திகதி கல்லால் அடித்து அவரின் மரணத்திற்கு காரணமாக இருந்ததாக காலஞ்சென்றவரின் மனைவி டபிள்யூ. டி. பொடிஹாமி என்பவர் மீது நித்தம்புவை பொலீசார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:—

"காலஞ்சென்றவர் எனது தகப்பனார். எதிரி எனது தாய். குடும்பத்தில் 8 சகோதரர்களும், சகோதரிகளும் இருக்கின்றனர். எனது தந்தையார் இறந்தது வரை தந்தையும், தாயும் ஒரு போதும் எந்தவிதமான மனஸ்தாபமும் அடைந்ததில்லை. எனது தகப்பனார் மூக்கு முட்டக் குடித்து விட்டு வீட்டுக்கு வந்து அயலவர்களுடன் சண்டை போடும் பழக்கம் உடையவர்.

"அன்று காலை எனது தகப்பனார் விழுந்து கிடப்பதை நான் கண்ட போது அவரின் இடது காதுக்கு அருகில் உள்ள காயத்தினூடாக இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

"விழுந்து கிடந்த தகப்பனாரை சுற்றி எனது தாயார் உட்பட நாலைந்து உறவினர்கள் அழுது கொண்டிருந்தனர்". (3)



பரதகுல மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் நியமனம் பெற்றுள்ள திரு. ஜோன் றொட்றிகோவை அகில இலங்கை பரத சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் சந்தித்து பல முக்கிய விஷயங்கள் பற்றி பேச்சு வார்த்தை நடத்தினர்.

"மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சி செலுத்தும் இந்த ஐந்து ஆண்டு காலத்தில், பரதகுல மக்களின் நலன் கருதி பாராளுமன்றத்தில் நான் உரிமைக் குரல் எழுப்புவேன்" என்று திரு. ஜோன் றொட்றிகோ தன்னைப் பேட்டி கண்ட பிரதிநிதிகளிடம் உறுதி கூறினர்.

பேச்சுவார்த்தையின் போது இப் படம் பிடிக்கப்பட்டது. (ல)

## 'ஒத்துக்கொள்ளவுமில்லை மறுக்கவும் இல்லை'

தாபரிப்பு வழக்கொன்றில், எதிர் மனுதாரரை நோக்கி, "மனுதாரர் கையில் வைத்திருக்கும் குழந்தைக்கு நீரா தந்தை? எனக் கேட்ட போது அதைப் பற்றித் தனக்கு ஒன்றும் சொல்ல முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

கொழும்பு மேலதிக நீதவான் திரு. ஆர். டி. பி. ஜயசேகரா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றின்போதே இவ்வாறு நடைபெற்றது.

அங்கொடையைச் சேர்ந்த கே. எட்வின் குபிறல் என்ற பெண் தனக்கும் தனது மூன்று பிள்ளைகளுக்கும், ரெசய்னு ஜோன் என்பவரிடமிருந்து தாபரிப்புப் பணம் பெற்றுத் தரும்படி கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் சாட்சியமளித்த போது தெரிவித்ததாவது:—

"நான் எதிர்மனுதாரரை 1964ம் ஆண்டு ஜனவரி மாதம் சட்டப்படி திருமணம் செய்தேன். எமது திருமண வாழ்க்கையின் பலனாக நான் மூன்று குழந்தைகளுக்குத் தாயானேன்.

"எனது கணவர் எனக்குப் பல தொல்லைகள் தந்த வண்ணமிருந்தார். 1969-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவர் என்னையும் என் குழந்தைகளையும் தவிக்கவிட்டு எம்மைப் பிரிந்து சென்றுவிட்டார்.

"தற்போது அவர் பியசிலி என்ற ஒர் பெண்ணுடன் வாழ்க்கை நடத்தி வருகிறார். இப்போது அப் பெண் கருத்தரித்திருக்கிறார்.

"எனது கணவன் ஒரு தையற்காரர், அத்துடன் பொருட்களை வாங்கி விற்பனை செய்பவர். இதனால் இவருக்கு மாதாந்த வருமானம் சுமார் 1,500 ரூபாவிற்கு குறையாமலுண்டு. ஆகவே, அவரிடமிருந்து நியாயமான அளவு தாபரிப்புப் பணம் பெற்றுத் தரும்படி கேட்கிறேன்.

இந் நிலையில் வழக்கு பின் போடப்பட்டது. (ல-7)

## தலைமை ஆசிரியர் இல்லை

புங்குடுதீவு, ஆக. 29

நெடுந்தீவில் ஏழு பாடசாலைகளும், புங்குடுதீவில் மூன்று பாடசாலைகளும் தலைமையாசிரியர்களின்றி இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளுக்கு உடனடியாகத் தலைமையாசிரியர்களை நியமிக்குமாறு தீவுப்பகுதி ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது. (ல-240)

எல்லா வீடுகளுக்கும் ஒரு வைத்தியர்!

உங்களுக்கு எந்தவிதமான ஒரு நோய் ஏற்பட்டாலும் ஒரு தட்வை சித்தாலேப்ப வை பாவித்துப் பாருங்கள்.

உங்கள் வலியுள்ள இடத்தையடைந்து அதை குணப்படுத்தும். இதை தடவுவதால் உடலின் உள்ளேயும், மேலிலும் ஒரே விதமாக குணம் கிடைக்கும். பாவிக்கும் முறைகள் பெட்டிக்குள் இருக்கின்றது.

ஒரு பெட்டியின் விலை ரூ. 2-50
ஒரு சிறிய சீசாவின் விலை ரூ. 1-00

விநியோகஸ்தர்கள்:

பேர்ஸி டிரேடிங் கொம்பனி

185, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு—

குண்டிக்காய் ரோக நிபுணரான மஹந்திரிக் த சில்வா ஹெட்டிகொட அவர்களால் தயாரிக்கப்பட்ட

சித்தாலேப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்துலபெரேராகொலை

## வழக்கு விசாரணை ஆரம்பம்

டாக்டர் பந்துல பெரேரா கொலை வழக்கு நேற்று முதலாவது தினமாக கொழும்பு அஸைஸ் நீதிமன்றத்தில் அஸைஸ் கமிஷனர் திரு. டி. பீ. திசங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்ததாயினும் அரை மணித்தியாலத்திற்கு முன்னரே நீதிமன்ற வளவினுள் ஜனக் கூட்டம் பெருமளவில் திரண்டு வந்திருந்தது. கூட்டத்தினுள் இளம் வயதினரே அதிகமாகக் காணப்பட்டனர். நீதிமன்ற வாயில்கள் திறக்கப்பட்ட சில விநாடிகளுக்குள்ளேயே நீதிமன்ற பார்வையாளர் பகுதி பொது மக்களால் நிரம்பி விட்டது.

நீதிமன்ற விசாரணை ஆரம்பமான உடனே இரண்டாவது எதிரிக்காக ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் "தான் நீதிமன்றத்தில் ஜூரர்கள் இன்றி சில சட்ட வாதங்களை தெரிவிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்"

நீதியரசரின் முன்னிலையில். அஸைஸ் "கிளார்க்" நீதிமன்றத்தில் சமுகமாயிருந்த ஜூரர்களை, ஜூரர்கள் அறையில் சென்று இளைப்பாறும்படி கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றத்தில் ஜூரர்கள் இன்றி முதலாவது, இரண்டாவது எதிரிகளுக்காக ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர்கள் தமது சட்ட வாதங்களைச் சமர்ப்பித்தார்கள். அதன் பின்னர் முடிக்குரிய தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபேசூரிய தமது முடிக்குரிய தரப்பு வாதத்தை ஆற்றினர்.

இவர்களின் சமர்ப்பணங்கள் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நீடித்தது.

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தங்கவேலு என்றழைக்கப்படும் சுப்பையா முத்தையா, ஆறுமுகம் சுப்பிரமணியம் ஆகிய இருவர் மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதியளவில் கொழும்பைச் சேர்ந்த செல்வி ஹிராந்தி டீ சில்வாவுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதற்கு அவரைக் கடத்திச் செல்வதற்கு அல்லது அதற்கு உதவுவதற்கு இணங்கியதாக இரு எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் டாக்டர் பீ. எம். டீ. பந்துல பெரேரா என்பவரைக் கொலை செய்ததாகவும் முதலாவது எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முடிக்குரிய தரப்பில் திரு. ரைமென் பெர்னாண்டோவின் அனுசரணையுடன் திரு. ரஞ்சித் அபேசூரியா ஆஜராகியிருந்தார்.

முதலாவது எதிரியின் சார்பில் திரு. ராஜா குணரெட்னவின் அனுசரணையுடனும் வழக்கறிஞர் ஜனாப் யு. எல். எம். பாருக்கின் உதவியுடனும் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஈ. சிட்டி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இரண்டாவது எதிரியின் தரப்பில் திரு. பிமால் ராஜபக்ஸ, திரு. சி. வி. விவேகானந்தன் ஆகியோரின் உதவியுடனும், திரு. ஆர். பரமேஸ்வரன், ஜனாப் எம். முகுப்டீன் ஆகியோரின் அனுசரணையுடனும் வழக்கறிஞர் திரு. ஈ. விவேகானந்தன் நீதிமன்றத்தில் ஆஜரானர்.

நீதிமன்றத்தில் எதிரிகள்மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தமிழில் வாசிக்கப்பட்டது. முதலாம் எதிரி இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தான் குற்றவாளியல்லவெனத் தெரிவித்தார். இரண்டாம் எதிரியும் தான் குற்றவாளியல்ல எனக் கூறினர். (ம–7)

## பாழ் குடிசையில் கன்னி கற்பழிக்கப்பட்டாளாம்

திருகோணமலை, ஆக. 29

கட்டிளம் காளையரால் கற்பழிக்கப்பட்டாளாம் கிராமத்துக் கட்டழகி சோமாவதி. இச்சம்பவம் திருகோணமலைத் தொகுதியில் உள்ள பம்பறுகஸ்வேவா என்ற இடத்தில் நடைபெற்றதாம்.

இக்கற்பழிப்புச் சம்பவம் சம்பந்தமாக சோமாவதி பொலீஸில் புகார் செய்துள்ளார். அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"நான் ஒரு கன்னிப் பெண். இச்சம்பவம் நடைபெற்றதற்கு முன்பு நான் எவருடனும் உடலுறவு கொண்டது கிடையாது.

"சம்பவம் நடந்த தினம் நான் எனது வீட்டை நோக்கி ரோட்டு வழியே சென்று கொண்டிருந்த போது சந்தேக நபரான இந்த இளைஞர் எனக்கு எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்தார். அவர் என்னை நெருங்கியதும் என்னை இழுத்துக் கொண்டு ரோட்டிற்குச் சமீபத்திலுள்ள பாழும் குடிசை ஒன்றிற்கு கொண்டு சென்றார். அங்கு வைத்து என் விருப்பத்திற்கு மாறாக என் மீது குற்றம் புரிந்தார்.

"அந்நேரத்தில் நான் அவருடன் போராடாமல் அவரின் விருப்பத்திற்கு இணங்கி நடந்தேன். அவர் கத்தி ஒன்றைக் காட்டித் தன்னுடன் உடலுறவு கொள்ள மறுத்தால் அந்த இடத்திலேயே பிணமாக்கி விடுவேன் எனத் தெரிவித்திருந்தார். அதைத் தொடர்ந்தே நான் அவரது விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை."

இதுபற்றி விசாரணை நடாத்திய உப்புவெளிப் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் ஓர் இளைஞனைக் கைது செய்துள்ளனர். (ல–7)

## மினி மங்கையருக்கு எதிராக கிராமசபை போர்க்கோலம்

"மினி" மங்கையர்கள் மீது கணை தொடுத்துள்ளது உடகம்பஹ கிராம சபை. அண்மையில் நடைபெற்ற கிராம சபை மாதாந்தக் கூட்டத்திலேயே இக்கணை தொடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளில் முக்கியமாக உயர் வகுப்பில் கல்வி பயில்வோர் மினி கவுண் அணிவதை தடை செய்ய கல்வி அமைச்சர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறது அத் தீர்மானம்.

ஹங்குரன்கெட்ட தொகுதியில் உள்ள இந்தக் கிராம சபையில் அம்பிட்டிகொட வட்டார உறுப்பினரான திரு. எல். பி. ரத்னாயக்கா இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அவர் இத் தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய போது குறிப்பிட்டதாவது: தற்போதைய அரசாங்கத்தின் கலாசார அமைச்சரும் மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், மினி கவுண், எமது வளர்ந்து வரும் பெண் சமூகத்திற்கு உகந்த உடையல்ல எனக் கருத்துத் தெரிவித்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

"ஒழுங்கற்ற, ஆபாச உடையான இந்த மினி கவுணை முதலில் பாடசாலைகளில் இருந்து ஒழித்துக் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மினி கவுணை விடுத்து மாணவிகளை எமது பாரம்பரிய உடையை அணியும்படி ஊக்குவிக்க வேண்டும்" என்றார்.

(ம–7)

## சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

நாவலப்பிட்டி, ஆக. 29

நாவலப்பிட்டி கொந்தென்னுவ அருகில் கண்டெடுக்கப்பட்ட அழுகிய எலும்புக் கூடு யாருடையது என்பது இன்னும் தெரியவில்லை. இதனை அறிவதற்கு அரசாங்க இரசாயன பகுதிக்கு அதன் எலும்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவிதத்தில் நாகஸ்தனை காட்டில் அழுகிய பிரேதம் சில மாதங்களின் முன்பு கண்டுபிடிக்கப்பட்டது. பவ்வாகம பகுதியில் தலை சிரைத்த பிணம், கொத்தென்னுவ ரயில் பாதையில் கிடந்த பிணம் இவையாவும் ஒருவராலும் அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ல–215)


## பிரேம மித்ரா

காளைப் பருவத்திலும் களைப்பின் மிகுதியால் அவஸ்தைப் படுகிறீர்களா?

உடலுக்கு பருமனும் எடையும் அதிகரிக்க செய்து அழகு படுத்துகிறது.

### பிரேம மித்ரா

இயற்கையாகவோ அல்லது நோய் வாய்ப்பட்ட காரணத்தாலோ உடல் வளர்ச்சியில்லையா? எவ்வளவு நல்ல உணவு உட்கொண்டாலும் உடம்பில் சதை பிடிக்கவில்லையா? மூச்சுத் திணறல், கபக்கட்டு, பசியின்மை, அஜீர்ணம், வயிற்றுவலி, மலச்சிக்கல், உடல் முழுவதும் உஷ்ணதிக்கும், அங்க உறுப்புகளில் கணு கணுவாக வலி பிடிப்பு, தசைநார்களிலும் வலி பிடிப்பு, ருசியின்மை முதலியவைகளுக்கு பரிகாரமளிக்கும் மருந்து:

### பிரேம மித்ரா

உங்களது உடல் சக்தியையும், மனச் சக்தியையும் பாதுகாக்கவும், இழந்த சக்தியை மீண்டும் பெறவும், பருமனும் எடையும் அதிகரிக்கச் செய்யவும், பல காரணத்தாலும் பல சந்தர்ப்பங்களிலும் நஷ்டப்பட்டு போன இளமை உணர்ச்சியும் தாது புஷ்டியும் மீட்டெடுக்க பிரேம மித்ரா உபயோகியுங்கள்.

40 வேளை மருந்து தபால் செலவுடன் 12 ரூபா 90 சதம்.

### மாதர் மித்ரா (சூதக நிவாரணி)

ஸ்திரிகளின் கர்ப்பப்பை சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் ஒரு திவ்விய ஔஷதம். மாத விலக்கு காலங்களில் உண்டாகும் வயிற்றுவலிகளைப் போக்க இது சிறந்தது. சூதக வயிற்றுவலி, சரீரம் ஸ்தூலித்தல், உளைதல். குத்தல், கைகால் சோர்வு, இடுப்புவலி சூதகத்தின் நிறம் மாறுதல், இரத்தம் கட்டி கட்டியாகவும், கறுத்தும் படுதல், மாதாமாதம் சூதகம் சிறிதுகண்டு மறைதல், முறை தவறி ஆதல் வயிறு பெருத்தல், மேல் மூச்சு, ஆயாசம் மூர்ச்சை இங்ஙனம் பல வியாதிகளையும் எமது மாதர் "மித்ரா" நிவர்த்தி செய்யும்.

விலை: தபால் செலவுடன் ரூபா 11/–

வி. பி.பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏக விநியோகஸ்தர்கள்:—

### அன்பு நிலையம்

303, காலி வீதி, கொழும்பு – 3.

தொலைபேசி: 26946.



## தவருத வசிய பரிகாரம்

காதலில் வெற்றி பெறுவதற்கு, நிரந்தரமானதற்கு மற்றும் பெற்றோரின் விருப்பத்தை பெறுவதற்கும் மலையாளி பரிகாரம் செய்து கொடுக்கப்படும். இதுவரைக்கும் பரிகாரம் பெற்று பலன் கிடைக்காதவர்கள் இன்றே எமக்கு எழுதி உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள், இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களை பெறுங்கள்,

### சிவபாலன்

குப்த வித்தியாயதனய,

ஊறுப்பொலை.





பயிற்சியாளர்களே! ஜப்பானின் சிறந்த ரேடியோ நிபுணரினல் எழுதப்பட்ட ரேடியோ தயாரிப்பை இலகுவாகக் கற்றுக் கொள்ளக் கூடிய — ஒரு சிறு குழந்தைகூடக் கற்றுக் கொள்ளக் கூடிய ரேடியோவை மாற்றுமலே ஒரு கை ஏடு. ரேடியோ, டிரான்ஸிஸ்டராக துண்டு உருக்கினல் தொய்லை சுற்றி 6 டோர்ச் பாட்டரிகளினல் H.T. 90 L.T. 1.5. தயாரித்து இயங்கச் செய்வது. பழைய பாட்டரி நிரப்புதல், ஒரு வருட பாவனைக்கு பாட்டரி தயாரித்தல், டிரான்ஸிஸ்டர் செய்வது, இயர் போன் முதல் பெரிய ஒலிபெருக்கி ரேடியோ வரை செய்யும் முறைகளை கற்பிக்கும் புத்தகம் ரூ. 3/50. அத்துடன் எல்லா மாதங்களிலும் சீட்டிழுக்கப்படும். ரேடியோ பெறுவதன் பேறுபடிக் கூப்பன் ஒன்று அனுப்பப்படும். எல்லா விண்ணப்பக்காரர்களுக்கும் ஒரு பாக்கெட் ரேடியோவின் சர்க்கிட் ஒன்று இலவசம், பணம் கட்டி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படும்.

Director, [illegible] (Technical Dept), [illegible]

Central Suppliers, Dehiwala.


இப் பத்திரிகையை அசோசியேட்டட் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 30 ஆகஸ்ட் 1970.

Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org